

சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று (10.01.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத் துறையில் பணிபுரிந்து. பணியின்போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 2 பேருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிக்கான நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், மற்றும் செய்தித் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### எழும்பூர் தொகுதியில்

# 600 கழகச் செயல்வீரர்களுக்குப் பொங்கல் பரிசு!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை,ஜன.11-

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தைப் பொங்கலை முன்னிட்டு, எழும்பூர் தொகுதியில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் 600 கழக முன்னோடிகள் மற்றும் செயல் வீரர்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் விழா சேத்துப் பட்டு, ஹாரிங்டன் சாலை, மாநகராட்சி சமூக நலக் கூடத்தில் நேற்று (10.01.2025) நடைபெற்றது.

வேட்டி, சேலை, சட்டை, பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, 5 கிலோ கொண்ட அரிசிப் பை, சர்க்கரை, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, சாம்பார் மிளகாய்த் தூள், சமையல் எண்ணெய் உள்ளிட்ட மளிகைப் பொருட்கள் மற்றும் நாட்காட்டி அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் கழகத் தோழர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருசோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, மு.கமலக்கண்ணன்; 108-வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் பி.முத்துலெட்சுமி, எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் பி.எம்.ஜெயலட்சுமி, 77-வது வட்டத் துணை செயலாளர் ஆரோக்கியம், 108-வது வட்டத் துணை செயலாளர் ஜெ.இந்திராகாந்தி, 77-வது வட்ட அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், 108 ‘அ’ வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 58 ‘அ’ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல். சுகுமாரன், 108-வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் க.மணிகண்டன், ஜோ.சந்தோஷ்குமார்; தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் விஜயபோஸ், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள் பா.ஆனந்த், வீ.பாபு; பாக முகவர்கள் பி.பிரவீண்குமார், செந்தில், கவிதா, கார்த்திகேயன் மற்றும் ஜி. பிரவீண்குமார், கி.புஷ்பராஜ், பிரம்மதேவன், கோமகன், அசினாபேகம், நாகராஜ், வழக்கறிஞர் தர்மதுரை, சத்யகலா, ஆர். வேலு, பி.ரேகா, ஐசக், யாகூப், கபில், ஆர்.ஜெயா, பி.டி.சி.பாலு, தேவராஜ், எம்.கணேசன், வெங்கடேசன், ஜெயலெட்சுமி, சந்துரு, சதாசிவம், இருதயராஜ், பாண்டியன், ஏழுமலை, கோவிந்தன், சத்தியா, சேகர், ஆர்.சீனிவாசன், தட்சிணாமூர்த்தி, ஜெ.சரவணன், ஜெ.விநாயகம், தினகரன், ஜெயா, கமல், கென்னடி, கண்ணன், தர்மலிங்கம், பிரபு, எஸ். இராஜேந்திரன், என்.விஜயகுமார், எம்.கோகன்தாஸ், எஸ்.சங்கர், வீ.நாகராஜ், கே.ஜெய்சங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.

### தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ. தேவநிதி தலைமை!

# எழும்பூர் தொகுதி 58ஆவது வட்டத்தில் பொங்கல் விழா !

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. – இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜன.11

எழும்பூர் தொகுதி 58 ஆவது வட்டம், தாக்கர் தெருவில் கழகத் தோழர்கள் மற்றும் தாக்கர் தெரு குடியிருப்போர் இணைந்து நடத்தும் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் சமத்துவப் பொங்கல் விழா 14.01.2025 பொங்கல் அன்று காலை 11.00 மணி முதல் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும், விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் பரந்தாமன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவின்போது கோலப் போட்டி இசை நாற்காலி, உரியடித்தல், கயிறு இழுத்தல் ஸ்கிப்பிங் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் மாணவ மாணவியர்களுக்கான அறிவுத்திறன் போட்டி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

இவ்விழாவிற்குத் தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் எம்.இ. தேவநிதி தலைமையேற்கிறார் வி.சுதாகர் வி.விஜயகுமார். மு சரண்குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், அவைத் தலைவர் வெ.மருதன் ஆகியோர் வரவேற்பு உரை நிகழ்த்தவுள்ளனர்.

கே.எஸ்.எம். நாதன், முன்னாள் வட்டச் செயலாளர் ஜெ.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் கோ. ஏகப்பன், கோ.மணி, புரசை ஜி. தாமோதரன், இரா. கலைவேந்தன், து. களரிமுத்து, ஜெ.சரவணன் உள்ளிட்ட கழகத் தோழர்களும், முடிதிருத்தும் தொழிலாளர் மத்திய சங்கச் செயலாளர் எஸ்.சுரேஷ், வீ.மோகன் ராஜா சிங், வீ.இஸ்மாயில் உள்ளிட்ட பகுதிப் பிரமுகர்களும் மற்றும் தாக்கர் தெரு குடியிருப்பு வாசிகளும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் கவரைப்பேட்டையில், பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி சேலைகள் மற்றும் பொங்கல் தொகுப்பினை மாவட்ட செயலாளரும். கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் கி.வே. ஆனந்தகுமார், எஸ்.ரமேஷ், எஸ்.ராமஜெயம், கே.ஜி.நமச்சிவயம், கே.இ.திருமலை, ஜான் (61) பொன்னுசாமி. மி. மோ.பிரசாத். பா.பரத்குமார், மு.கேசவன், எம்.சங்கர், டி.பிரபாகரன், ஏ.எம். ரவிசந்திரன், எத்திராஜ், சீனிவாசன், கஜேந்திரன், அசோகன், துணைப்பதிவாளர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி, 135 வது வட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஈரோடு இறைவன், தியாகராயர் நகர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ. சந்திரசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 135 வது வட்டக் கழகச் செயலாளர் எம். எஸ்.பழனி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி, கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் வி.பி.எஸ்.ஜெனார்த்தா, தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜி.டி.அம்பேத்கர், மாவட்டப் பிரதிநிதி ஆர்.லோகாந்தன் மற்றும் 135 வது வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 4, –இல் நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 11.01.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 4 | கோபிசெட்டிப்பாளையம் | இராமயம்மாள் திருமண மண்டபம், கோபிசெட்டிப்பாளையம். |
| | மாலை 3.00 மணி | | பவானிசாகர் | கவரா மஹால், சத்தி – அத்தாணி சாலை, சத்தியமங்கலம். |
| 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | பவானி | பாவா திருமண மண்டபம், கவுந்தப்பாடி, பவானி |
| | மாலை 3.00 மணி | | அந்தியூர் | எஸ்.எம்.பி. திருமண மண்டபம், அத்தாணி, அந்தியூர் |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 10-01-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

# இளைஞர்களுக்கும் தி.மு.க.விற்கும் இருந்த சிறு இடைவெளியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சரி செய்து விட்டார்!

## சென்னை புத்தகக் காட்சி திராவிட ஆளுமை – வாசகர் சந்திப்பு நிகழ்ச்சியில் விடுதலை இராசேந்திரன் பேச்சு!



சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் இடம்பெற்றுள்ளது இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகம். அந்த அரங்கில் திராவிட இயக்க ஆளுமைகள் - வாசகர்கள் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி, நாள்தோறும் நடக்கிறது.

இதில் 8.01.2025 அன்று திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர், விடுதலை இராசேந்திரன் கலந்துகொண்டார்.

**சமரசத்திற்கு இடமில்லை!**

தமிழ்நாட்டில் எந்தக் கட்சியாக இருந்தாலும் சமூக நீதி, இடஒதுக்கீட்டிற்கு எதிராகப் பேச முடியாது. அநக்ச் சூழலை ஏற்படுத்தியது திராவிட இயக்கம். குறிப்பாக, இன்றைக்கு இந்தியாவில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஈடாக, மாநில சுயாட்சிக் கொள்கையை உரத்து முழங்குகிற மற்றொரு கட்சி இல்லை. ஆளுங்கட்சியாக இருக்கிற போதிலும், அந்த உரிமையில் சமசரம் செய்துகொள்ளாத கட்சி தி.மு.க. மட்டுமே.

மக்கள் நலத்திட்டங்கள், அறிவிப்புகள், பணிகள் அன்றாடம் நடைபெறும் ஆட்சியாக தி.மு.க. அரசு இருக்கிறது. மற்றொருபுறம் பார்த்தால், அரசுக்கு சம்பந்தமே இல்லாத ஏதாவது ஒரு பிரச்சினையைத் தூக்கிவந்து, அரசை விமர்சிக்கிற அரசியலும் நடந்து கொண்டிருக்கிறது. கருத்தியலில் தெளிவான புரிதலும், வலுவான அடித்தளமும் இருந்தால் மட்டும்தான் இந்தச் சவால்களை நம்மால் எதிர்கொள்ள முடியும். குறிப்பாக, களத்தில் நிற்கிற களச் செயல்பாட்டாளர்களுக்கு முக்கிய தேவை.

**தி.மு.க.வில் பண்பு மாற்றம்!**

குறிப்பாக துணை முதலமைச்சர் வந்த பிறகு தி.மு.க.வில் ஒரு பெரிய பண்பு மாற்றம் வந்திருக்கிறது. இளைஞர்களுக்கும் தி.மு.க.-விற்கும் இடையில் இருந்த சிறு இடைவெளியை அவர் சரி செய்திருக்கிறார்.

அப்படிப்பட்ட தி.மு.க.-வில் புதிதாக இணைந்திருக்கிற இளைஞர்களைக் கொள்கை ரீதியான வளர்த்தெடுக்கும் விதமாக பயிற்சி வகுப்புகளை நடத்தினார். தொலைக்காட்சி விவாதங்களில், யூடியூப் விவாதங்களில் இன்றைய தி.மு.க. இளைஞர்கள் மிகச் சிறப்பாக வாதங்களை முன்வைத்து, எதிரிகளுக்குப் பதிலடி தருகிறார்கள். அடுத்தகட்டமாக பேச்சுப்போட்டியை நடத்தி, 183 இளம் பேச்சாளர்களை உருவாக்கி இருக்கிறார்கள். இதனால் செயல் தளம், கருத்தியல் தளம் இரண்டிலும் வலுவான கட்டமைப்பு உருவாகியிருக்கிறது. இந்தக் கட்டமைப்பை மேலும் வலுவாக்க நமக்கு வாசிப்பு அவசியம்.

**தத்துவப் போராட்டம் நடக்கிறது!**

ஒன்றிய அரசுக்கு எதிராக தத்துவார்த்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். பா.ஜ.க.வின் மாநில உரிமை பறிப்புத் திட்டங்கள், கல்வி உரிமை பறிப்புத் திட்டங்கள் எல்லாவற்றும் ஒரு மாற்றுப்பார்வை, தமிழ்நாட்டில் இருந்துதான் முதலில் எழுகிறது. இந்தக் கொள்கை உறுதியால் நிதி இழப்பு உட்பட கடுமையான எதிர்ப்புகளையும் சந்திக்கத்தான் செய்கிறோம். அந்த இழப்புகளைவிட, நம் கருத்தியலும், கொள்கையும் பெரியது. அந்தப் புரிதல் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு இருக்கிறது. இன்றைக்கு மேடைப்பேச்சு, விவாதப் பேச்சின் தன்மை மாறிவிட்டது. நீண்ட நேரம் பேசுவதைக் கேட்க மக்கள் தயாராக இல்லை. சொல்லுகிற செய்தியைச் சுருக்கமாக, அதேவேளையில் ஆணித்தரமாகச் சொல்லவேண்டும். அந்தக் கருத்தை நேரடியாகச் சொல்லுவதை விட, எப்படி மெருகேற்றி, எந்தக் கண்ணோட்டத்தில் சொல்லப் போகிறோம் என்பதும் முக்கியமானது.

விமர்சனங்களை வைப்பதோ அல்லது விமர்சனங்களுக்கு பதிலளிப்பதையோ விட, இந்த அரசு செய்திருக்கிற சாதனைகள் போன்ற நேர்மறையான செய்திகளை முதலில் பேசலாம், எழுதலாம். ஏனென்றால், நம் சாதனைகள் ஒரு பக்கம் மலைபோல் இருக்கின்றன. ஆனால் அந்த மலையின் கீழே நின்றுகொண்டு யாரோ பேசுவது போல விமர்சனங்கள் இருக்கின்றன.

**கலைவடிவமும் முக்கியமானது!**

சாதனைகள் பெரிய சத்தமாக இருந்தால், விமர்சனங்கள் கீச்சுக்குரல்போல சிறியதாக உள்ளன. அதைப் புரியவைக்கும் வகையில் நமது பரப்புரை இருக்க வேண்டும்.

நமது சிந்தனைகளை மக்களிடத்தில் எடுத்துச்செல்ல பேச்சு, எழுத்து மட்டுமின்றி கலைவடிவமும் முக்கியமானது. கலாச்சார விழாக்களும் தேவையானது. இங்கு நடைபெறும் புத்தகக் காட்சி என்பது ஒரு மதச்சார்பற்ற கலாச்சார விழா.

அறிவுத்தேடலுக்கான விழா. சென்னை, கோவை, மதுரை போன்ற பல நகரங்களில் இப்போது வீதித் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. இத்தகைய விழாக்களை நாம் வரவேற்க வேண்டும், நாமும் பங்கெடுக்க வேண்டும்.

இத்தகைய மாற்றுப் பண்பாட்டைக் கட்சிக்குள்ளேயும் செயல்படுத்தும்போது அரசியலிலும் வலிமை கிடைக்கும். புதிய இளைஞர்களும் இந்த இயக்கத்தை நோக்கி வருவார்கள். இந்த முயற்சியை நாம் மேலும் மேலும் செய்துகொண்டே இருக்க வேண்டும்.